# 3 இலங்கையில் அபிவிருத்திப் போக்கின் தன்மை

"அபிவிருத்தி என்பது உலக மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தலாகும்." "ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ரீதியாக அனைத்து விடயங்களிலும் ஏற்படும் முன்னேற்றமே அபிவிருத்தியாகும்." அபிவிருத்தி பற்றி ஏற்கனவே நீங்கள் எட்டாம் வகுப்பில் கற்றுள்ளீர்கள். இப்பாடத்தினைக்கற்பதன் மூலம் இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதேசங்களின் அபிவிருத்திப் போக்கினையும், அதன் தன்மையையும் அதில் செல்வாக்குச் செலுத்துகின்ற பௌதீக, மற்றும் மானிடச் செயற்பாடுகளையும் அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் எப்பிரதேசத்தில் வாழ்ந்த போதிலும் அவ்வப்பிரதேசங்களில் நிலவுகின்ற பௌதிக அம்சங்களுக்கு அமையவே மானிடச் செயற்பாடுகளும் அமைந்து காணப்படும். பௌதிக சூழலுக்கு இசைந்தாற் போல், மனிதன் தனது தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் மனித செயற்பாடுகள் திட்டமிடப்படுகின்றன. "இலங்கையின் அபிவிருத்திப் போக்கின் தன்மை" எனும் பாடத்தைக் கற்பதன் மூலம் நீங்கள் இது பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

இலங்கையின் அபிவிருத்திப் போக்கின் தன்மைக்கு ஏற்ப முக்கியமாகப் பிரிக்கப்பட்டுள்ள சில பிரதேசங்களும், அப்பிரதேசங்களிடையே சிறப்பாகக் காணப்படும் சமூக பொருளாதார குறிகாட்டிகளும் தேசப்படம் 3.1 இல் காட்டப்பட்டுள்ளன. இப்படத்தை அவதானிப்பதன் மூலம் குறித்த பிரதேசங்களிடையே காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு கொள்ளலாம்.

அபிவிருத்தித்தன்மையின் போக்கிற்கு ஏற்ப இப்பிரதேசங்களிடையே பல்வேறு சமூகப் பொருளாதார மட்டங்களை இனங்கண்டு கொள்ளலாம். இங்கு கொழும்பு, களுத்துறை, மற்றும் கம்பஹா போன்ற மாவட்டங்கள் கொழும்பு பெருநகரப் பிரதேசத்தினுள்ளும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்கள் தெற்குப் பிரதேசத்தினுள்ளும் அடங்குகின்றன. இவ்விரு பிரதேசங்களினதும் அபிவிருத்தியின் தன்மை அனேகமாக சமனிலைத் தன்மையைக்காட்டுகின்றன. ஆயினும் பதுளை, மொனராகலை மாவட்டங்கள் உள்ளடங்கும் ஊவாப்பிரதேசத்தினதும், மட்டக்களப்பு, திருகோணமலை, மற்றும் அம்பாறை மாவட்டங்கள் உள்ளடங்கும் கிழக்குப்பிரதேசத்தினதும் அபிவிருத்திப்போக்கு ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்ட அபிவிருத்தியையே காட்டுகிறது. புள்ளிவிபரத் தரவுகளை அவதானித்து இதுபற்றிய மேலதிக விளக்கங்களை தேடிப்பெற்றுக் கொள்ளுங்கள்.

## இலங்கையின் அபிவிருத்திப் போக்கின் தன்மையை இனங்காண்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்கள்




*மூலம்: இலங்கை சமூக பொருளாதாரத் தரவு 2007 இலங்கை மத்திய வங்கி*

தேசப்படம் 3.1

இனங்காணப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திப்போக்குகளின் தன்மையில் இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படுவதற்கு அவ்வப்பிரதேசங்கள் தன்னகத்தே கொண்டுள்ள பௌதிக மற்றும் மானிட, தரைத்தோற்ற வேறுபாடுகளும் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதில் உள்ள முரண்பாடுகளும் பிரதான காரணிகளாக விளங்குகின்றன. இப்பிரதேசங்கள் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு அவ்வப்பிரதேசங்களின் பௌதிக, மானிட, மற்றும் தரைத்தோற்றம் தொடர்பில் ஆராயுமிடத்து, அபிவிருத்திப் போக்கின் தன்மையை மிக இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

பிரதேசமொன்றை வேறுபடுத்தி இனங்காண்பதற்குத் தேவையான நியதிகள் பற்றி நீங்கள் ஏற்கனவே கீழ் வகுப்புகளில் கற்றுள்ளீர்கள். அவ்வாறான நியதிகள் சில கீழே தரப்படுகின்றன.

1. தரைத்தோற்ற வேறுபாடு, காலநிலை போன்ற பௌதிகக் காரணிகள் (மத்தியமலை நாடு, கரையோரச்சமவெளி, ஈரவலயம்)
2. பௌதிக பிரதேசங்களினுள் இடம்பெறும் மானிடச்செயற்பாடு (தேயிலை, இறப்பர், நெல், படிக்கட்டுமுறை வேளாண்மை, சேனைப்பயிர்ச்செய்கை)
3. நிர்வாக எல்லைகளும் மனித செயற்பாட்டை சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். சேவைகளை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லைகள். (கிராம சேவகர் பிரிவு, மாவட்ட, மாகாண, நகர எல்லை, தொடர்பாடல், போக்குவரத்து, பொலிஸ் அதிகாரப்பிரிவு)

**செயற்பாடு**

1. தேசப்படப்புத்தகமொன்றின் துணையுடன் இலங்கையைப் பல்வேறு வலயங்களாகப் பிரிப்பதற்கு பிரயோகிக்கப்படும் நியதிகள் மூன்றைக் குறிப்பிடுக.
2. இந்நியதிகள் மூலம் இலங்கை பிரிக்கப்பட்டுள்ள வலயங்களைப் பெயரிடுக

இலங்கையில் இனங்காணப்பட்ட பிரதேசங்களின் பௌதிக மற்றும் மானிட செயற்பாடுகளின் இடைத்தொடர்புகளை ஆராயுமிடத்து கீழ் காணப்படும் விடயங்கள் பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

1. பிரதேசங்களுக்கிடையே ஒத்த தன்மையுடன் குறித்த பிரதேசத்தில் தனித்துவமான பௌதிக இலட்சணங்களும் காணப்படும். (ஊவாப் பிரதேசத்தில் காணப்படும் மலைநாட்டு தரைத்தோற்ற வேறுபாடுகள் மற்றும் காலநிலை என்பவற்றை வடக்குப்பிரதேசத்தில் காண முடியாது.)

2. பிரதேசங்களுக்கிடையே அபிவிருத்தி மட்ட நிலைமைகளை ஆராயும் போது ஏற்றுக்கொள்ளப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டதுமான எல்லைகளுடன், கூடிய நிருவாக அலகுகள் அபிவிருத்தித்தரவுகளைச் சேகரிப்பதற்கு வசதியாகப் பயன்படுத்தப்படுதல். (மாகாணம்,மாவட்டம்)
3. நாடு என்ற வகையில் அபிவிருத்தியைப் பற்றி நோக்கும் போது ஓர் பிரதேசத்தின் அபிவிருத்தியானது பிரதேச ரீதியாக முக்கியத்துவம் பெறும் அதே வேளை அதன் மூலம் கிட்டும் நன்மை அப்பிரதேசத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படுவதில்லை. (மகாவலிப்பிரதேசத்தில் உற்பத்தியாகும் அரிசி, நீர்மின்சக்தி என்பன நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் பகிரப்படுகின்றன.)
4. பிரதேச அபிவிருத்தி போக்கின் தன்மையை ஆராயுமிடத்து அப்பிரதேச அபிவிருத்தியின் நன்மை அனைத்துப் பிரதேசங்களுக்கும் சமமாகச் சென்றடையாத நிலை காணப்படுதல்.

   (மேல்மாகாணத்தில் கொழும்பு மாநகரப்பகுதியில் காணப்படும் வீதிகள், குழாய் நீர்வசதிகள், போன்றவை திவுலப்பிட்டிய, மெதகம்பிடிய, மாபோதல போன்ற தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களுக்கோ கிராமப் பிரதேசங்களுக்கோ கிடைக்கப் பெறுவதில்லை.)
5. இலங்கையின் சில பிரதேசங்களின் அபிவிருத்திக்கு விரும்பத்தக்க விதத்தில் மனித வளம் கவரப்படுவதையும் வேறு பிரதேசங்களில் மனித வளம் வீணடிக்கப்படுதையும் காணலாம்.

   (முறையே மேல்மாகாணமும் ஊவா மாகாணமும்)
6. பௌதிக வளங்களின் பரம்பலில் உள்ள வேறுபாடுகள் மனிதனின் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துதல்.

**செயற்பாடு**

1. “இலங்கையின் மகாவலி அபிவிருத்தி வலயம் பல்வேறு பிரதேசங்களுக்கும் உரித்தானது.” இதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டினை எழுதுக.
2. தேசப்படம் 3.1 இல் காட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு பிரதேசம் தொடர்பாகவும் ஒவ்வொரு சிறப்புத் தன்மையைக் குறிப்பிடுக.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திப்போக்கின் தன்மையை பரிசீலனை செய்து பார்ப்போம்.

## கொழும்பு பெருநகரப் பிரதேசம்




**உங்கள் அறிவுப் புத்தகத்திற்கு. . .**

துரிதமாக விருத்தியடைந்துவரும் கொழும்பு நகரைச் சூழ்ந்து இந் நகரத்தின் காரணமாக உருவான நகரங்களும், நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள உபநகரங்களும் நகர்க் கிராம வலயங்களும் காணப்படுகின்றன.

இவை அனைத்தையும் உள்ளடக்கிய பரந்த பிரதேசம் பெருநகரப் பிரதேசம் (Metropolitan area) என அழைக்கப்படுகிறது.

**கொழும்பு பெருநகரப் பிரதேசம்**




தேசப்படம் 3.2

மூலம் - இலங்கை தேசப்படங்கள் (ஜெயா வெளியீடு)

கொழும்பு பெருநகரப் பிரதேசத்தினுள்; கொழும்பு, கம்பஹா களுத்துறை ஆகிய மாவட்டங்கள் அடங்குகின்றன. இப்பிரதேசத்தின் நிருவாகச் செயற்பாடுகள் கீழ் வரும் உள்ளூராட்சித் தாபனங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன.


- மாநகர சபை
- நகர சபை
- பிரதேச சபை

2001 ஆம் ஆண்டு சனத்தொகைப் புள்ளி விபரங்களின்படி கொழும்பு நகரப்பிரதேசத்தில் 5648000 மக்கள் வாழ்கின்றனர். உள்ளக நீர்த்தேக்கங்கள் தவிர்ந்த மொத்த நிலப்பரப்பு 3593 சதுர கிலோ மீற்றர்களாகும். குடி அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 1572 ஆகும். (இலங்கை மத்திய வங்கி - 2007)

**செயற்பாடு**


1. கொழும்பு பெருநகரப் பிரதேசத்தினுள் அடங்கும் மாவட்டங்களைப் பெயரிடுக.
2. தேசப்படம் 3:2 ஐ அவதானித்து கொழும்பு பெருநகரப் பிரதேசத்தில் முக்கிய நகரைச் சூழவுள்ள உப நகரங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.
3. இப்பிரதேசத்தின் வடக்கு, தெற்கு எல்லைகளாக காணப்படும் இரு நதிகளைப் பெயரிடுக.
4. கொழும்பு பெருநகரப் பிரதேசத்தில் களச்சுற்றுலாவை மேற்கொள்வதற்கு பொருத்தமான விபரங்கள் அடங்கிய தகவல் பத்திரமொன்றைத் தயாரிக்க.

**கொழும்பு பெருநகரப் பிரதேசத்தில் காணப்படும் சிறப்பு அம்சங்கள்.**




உரு 3.1

## கொழும்பு பெருநகரப் பிரதேசத்தில் கைத்தொழில் பரம்பல்




தேசப்படம் 3.3

தேசப்படம் 3.2 இனையும் 3.3 இனையும் நீங்கள் அவதானிக்கும் போது கொழும்பு பெருநகரப் பிரதேசத்தின் பௌதிக மற்றும் மானிடச்செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திப் போக்கின் தன்மை தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்

- அரசதுறை சார்ந்த கைத்தொழில்கள் பாரிய அளவில் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளமை (டயர், இரும்பு, உருக்கு, கனியஎண்ணெய் சுத்திகரிப்பு)
- தனியார் துறை உற்பத்திக் கைத்தொழில்கள் பலவும் கொழும்பு நகரை அண்மித்துக் காணப்படுதல். (துணிவகைகள், தைத்த ஆடைகள், பிஸ்கட், இறப்பர் உற்பத்தி பொருட்கள்)
- கொழும்பு நகரம்; புகையிரதம், பெருந் தெருக்கள் போக்குவரத்து வலையமைப்பின் கேந்திர ஸ்தானமாக விளங்குதல். (புகையிரதக்கட்டுப்பாட்டு மையம்)

நிருவாக நகரம், முக்கிய வர்த்தக நகரம், என்பவற்றுடன் துறைமுகமும் கொழும்பை அண்மித்த கம்பஹா மாவட்டத்தில் விமான நிலையமும் அமைந்து காணப்படுதல். உட்கட்டமைப்பு வசதிகள் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவிலும் களுத்துறை மாவட்டத்தில் குறைவாகவும் காணப்படல். (வைத்தியசாலை, பாடசாலை, வங்கி, காப்புறுதி நிறுவனங்கள்) அதிக குடியடர்த்தியானது பெருந்தெரு வலையமைப்பு வழியாகவும், உபநகரங்களிலும் செறிந்து காணப்படுவதுடன் அதற்கு அப்பால் நகர்க்கிராமங்களிலும் அதனை அண்டிய கிராமங்களிலும், தனிமைப்படுத்தப்பட்ட பட்டணங்களிலும் பொது வசதிகளும் குடியடர்த்தியும் குறைந்து செல்லுகின்ற போக்கை அவதானிக்கலாம்.

இவ்விடயங்களினூடாக கொழும்பு பெருநகரப்பிரதேசத்தின் அபிவிருத்திப் போக்கின் வேறுபாடுகள் தெட்டத்தெளிவாகின்றன.

கொழும்பு பெருநகரப்பிரதேசத்தின் வீதிப்போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக மேம்பாலங்கள், பயணிகள் சுருங்கைப் பாதை, நடைபாதைகள் போன்றன அமைக்கப்பட்டிருப்பதுடன் மேலும் இவைபோன்றனவற்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுமுள்ளது.

**செயற்பாடு**

இது வரை நீங்கள் கற்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு பெருநகரப்பிரதேசம் பற்றி சிறுகையேடு ஒன்றைத் தயாரிக்குக.

கொழும்பு பெருநகரப் பிரதேசம் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்

**பிரச்சினைகள்** — **தீர்ப்பதற்கான வழிகள்**

**கழிவுகளை (குப்பைகளை) முறையற்ற விதத்தில்அகற்றுதல்**

- கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிச் செயற்பாட்டுக்கு உட்படுத்தல்.
- கழிவுகளை அகற்றும் போது அவற்றை வகைப்படுத்தும் முறை பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல்.
- நகரத்தைச் சுத்திகரிக்கும் பொறுப்பை தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல்.

**குடியிருப்பு நெருக்கடி**

- வீடமைப்புத்திட்டங்களை உருவாக்குதல்.
- மிகக் குறைந்த வசதிகளையுடைய வீடுகளுக்குப்பதிலாக வசதிகளுடனான மாடிவீடுகளைக் கட்டுதல்.
- வீடமைப்புக்காக கடன் வசதிகள், நிதி உதவிகள் வழங்குதல்.

**நகர நெரிசல்**

- நகர அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளுதலும், நடைமுறைப்படுத்தலும்.
- சட்ட விரோதக் கட்டிடங்களை அகற்றுதலும் அதற்காக வேறுபிரதேசங்களை வழங்குதலும்.
- மேம்பாலங்களை அமைத்தல்
- நகரை அண்மித்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்

**சமூக விரோதச் செயல்கள்**

- புறநகர்பகுதியை விருத்தி செய்தல்.
- நகரங்களுக்குள் நீர்வழிப் பாதைகளை விருத்தி செய்து படகு சேவையை ஆரம்பித்தல்
- போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல். நவீன கல்வி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். (வீதியோரச் சிறுவர்களுக்காக)
- சுயதொழில் வேலை வாய்ப்புகளில் ஈடுபடுத்தல்.
- நிதியுதவி மற்றும் பயிற்சிகளை வழங்குதல்

**சூழல் மாசடைதல்**

- சுற்றாடல் சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்தல்
- சூழல் பாதுகாப்பு முறைபற்றி மக்களுக்கு அறிவூட்டுதல்.
- சூழலை அழகுபடுத்தும் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தல். (வீதியின் இருமருங்கும் மரங்கள் நடுதல், குறுகிய இடங்களில் பூச்செடிகளை நடுதல்.)
- மரக்கறி அலங்கார தோட்டங்களை அமைத்தல்.
- நகரத்துள் குப்பை கூளங்களை அகற்றுவதற்கும் திண்ம கழிமங்களை அகற்றுவதற்கும் வடிகால் அமைப்பினை ஏற்படுத்தல்.
- டெங்கு ஒழிப்பு திட்டத்தை மேற்கொள்ளல்.

உரு 3.2

இவ்வாறான நன்மை பயக்கும் பௌதிக, சமூக கலாசார சூழலைக் கட்டியெழுப்புவதே அபிவிருத்தியின் இலக்காகும்.

**செயற்பாடு**

1. கொழும்பு பெருநகரப் பிதேசத்தில் நீங்கள் ஒரு சமூக அமைப்பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டால் அப்பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக உங்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றி வகுப்பறையில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்துக.
2. இப்பிரதேசத்திற்கு வேறு பிரதேசங்களின் மனித வளங்கள் கவரப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை உள்ளடக்கிய ஒரு பட்டியலைத் தயாரிக்குக.

## மகாவலி அபிவிருத்திப் பிரதேசம்

ஹோட்டன் சமவெளியில் ஊற்றெடுத்து திருகோணமலையை அண்மித்த சமுத்திரக் கரையில் சங்கமமாகும் மகாவலிகங்கையின் மொத்த நீளம் 331 கி.மீ ஆகும். இவ்வாறு செல்லும் மகாவலிகங்கை தன்னகத்தே கொண்டுள்ள நிலப்புலப் பிரதேசம் 10327 சதுர கிலோ மீற்றர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் கொள்ளளவு நீரின் பெறுமதியை அறிந்து கொண்ட இலங்கை அரசு 1970 மாசிமாதம் 28ஆம் திகதி மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டப்பணிகளை பொல்கொல்லையிலிருந்தும் போவதென்னை யிலிருந்தும் ஆரம்பித்தது. முப்பது வருட அபிவிருத்தித் திட்டமாக வடிவமைக்கப் பட்டதாயினும் இத்திட்டம் ஆறு வருடங்களில் நிறைவு செய்யும் வகையில் 1977ஆம் ஆண்டு மீள் வடிவமைக்கப்பட்டு துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற வகையில் பின்வரும் செயல்திட்டப் பணிகளை ஒருமித்து ஆரம்பித்தது. அவையாவன கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகல மற்றும் மாதுறு ஓயா நீரத்தேக்கங்கள் உட்பட தென்கரை உள்ளகப்பள்ளத்தாக்கு வாய்க்கால் வரையிலான நீர்பாசனத்திட்டங்கள்.

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கி வந்த உடவளவைத்திட்டம் 1982 இலும் L வலயம் என அழைக்கப்பட்ட வெலி ஓயாப் பிரதேசம் 1987 ஆம் ஆண்டிலும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன.

மகாவலி தன் குறிக்கோளை நிறைவேற்றிய வகையில் 2010 ஆம் ஆண்டு வரை குடியமர்த்திய மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 162932 ஆகும். இவற்றில் 96835 விவசாயக் குடும்பங்கள் உள்ளடங்கும். ஏனையோர் வர்த்தகர்களும், வேறு தொழில்களில் ஈடுபட்டோருமாவர்.

மகாவலி மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர் மின்சக்தியின் கொள்ளளவு 671 மெகா வோட்களாகும். மகாவலி வலய விவசாயிகள் அவ்வருடத்தில் 150598 ஹெக்டயர் நிலப்பரப்பிற்கு பாசன வசதியைப் பெற்று 707836 மெற்றிக் தொன் நெல்லை தேசத்திற்கு பங்களிப்பு செய்துள்ளனர். இது மொத்த உள்நாட்டு நெல் உற்பத்தியில் 21% மாக காணப்படுகின்றது. (மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை – 2005,2010) மகாவலியின் இரண்டாம் கட்டத்தின் கீழே அமைக்க உத்தேசிக்கப்பட்ட மொறகஹந்த திட்டமானது நாட்டின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் 2007 ஜனவரி 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இதன் நிர்மாணப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

இத்தகவல்களுக்கேற்ப இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாரிய பலநோக்கு அபிவிருத்தித் திட்டமாகக் கொள்ளப்படுவது மகாவலி அபிவிருத்தித்திட்டமேயாகும்.



**உங்கள் அறிவுக்கு**

மகாவலி அபிவிருத்திப் பிரதேசம் மகாவலி கங்கை நீர் வழங்கும் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டமன்று. ஆற்றுப்பள்ளதாக்குப் பிரதேசங்கள் பல இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் நதிப்படுக்கையின் பிரதேசத்தை வளப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் சென்று வேறு ஆற்றுப்பள்ளத்தாக்குப் பிரதேசங்களையும் வளப்படுத்துவதற்கு துணையாக அமைந்துள்ளது. சில மாவட்டங்கள், மாகாணங்களுக்கு நேரடியாக நன்மைகளையும் விளைவித்துள்ளது.

**மகாவலித் திட்டத்தின் தேசியமட்டத்திலான அபிவிருத்தி**



நீர்மின் உற்பத்தி



மேலதிக நீரைச் சேமித்தல், மீன்பிடிக் கைத்தொழில்



மேல் ஊட்டபிரதேச பாதுகாப்பு



புதிய, பழைய விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம்



மரமுந்திரிகை




சரணாலயப் பாதுகாப்பு

- ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை
- புதிய குடியேற்றங்களை நிறுவுதல்
- புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை நிறுவுதல்
- உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றம்
- புதிய தொழில் வாய்ப்புகள் உருவாதல்

உரு 3.3

# மகாவலி அபிவிருத்திப் பிரதேசம்




தேசப்படம் 3:4

மூலம்: மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கை தேசிய தேசப்படப் புத்தகம் 2ம் பதிப்பு

**செயற்பாடு**

உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தேசப்படம் 3:4 இனை அவதானித்து கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புங்கள்.

| மகாவலி வலயம் | குளம் / நீர்த்தேக்கம் | பட்டினங்கள் |
|---|---|---|
| | | |

இலங்கையின் வலுசக்தி நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கங்களை அமைத்து அதனூடாக மின்னுற்பத்தியை மேற்கொள்வதும் இத்திட்டத்தின் பிரதான இலக்காகும். மகாவலி நீர்த்தேக்கங்கள் வாயிலாகப் பெறப்படும் மின் உற்பத்தியின் அளவினை கீழ்வரும் அட்டவணை 3.1 காட்டுகிறது.

**விக்டோரியா நீர்தேக்கம்**



உரு 3.4

*மூலம்: இலங்கை மகாவலி அதிகார சபை 2012.03.29*

**மகாவலி நீர்த்தேக்கங்கள் மூலம் பெறப்படும் மின் உற்பத்தி**

| நீர்த்தேக்கம் | மின்சக்திக் கொள்ளளவு மெகாவாட் |
|---|---|
| கொத்மலை | 201 |
| விக்டோரியா | 210 |
| ரன்தெனிகலை | 126 |
| ரன்டம்பே | 50 |
| போவதென்னை | 40 |
| உடவளவ | 06 |
| உக்குவெல | 38 |
| மொத்தம் | 671 |

அட்டவணை 3:1

**உங்கள் அறிவுக்கு**



மகாவலி நீர்த்தேக்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர்மின் உற்பத்தியானது தேசியமின் விநியோகப்பகுதியுடன் இணைக்கப்பட்டு நாடு பூராகவும் விநியோகஞ் செய்யப்படுகிறது. மகாவலி மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 2005 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின் சக்தியின் அளவானது மொத்தத் தேசிய உற்பத்தியின் 14% ஆகும். மேலும் 1977 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியினுள் மகாவலி மின்உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் பெறுமதியானது 132.4 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. *(மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி சபை 2005)*

மகாவலிப் பிரதேச அபிவிருத்தியின் போது குடியேற்றங்களை நிறுவுவதானது இதற்கு முன் செயற்படுத்தப்பட்டு வந்த கல்ஓயா மற்றும் உடவளவை திட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட முறையிலும் வேறுபட்ட ஓர் அமைப்பைக் கொண்டது. விவசாயக் குடும்பங்களுக்கு குறைந்த செலவில் அதிகபட்ச உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் கொத்தணி குடியிருப்புகளை ஏற்படுத்தியது அதன் விஷேட பண்பாகும்.

குடியிருப்புகளுக்கு அண்மித்து காணப்படும் சன நெரிசலான பகுதிகளுக்கு பொது வசதிகளை வழங்கும் போது அதற்காக மேற்கொள்ளும் செலவினங்களைக் குறைத்துக் கொள்வது இதன் நோக்கமாகும். மகாவலி குடியேற்றத் திட்டத்தின் கீழ் புதிய குடியிருப்புகள், புதிய கிராமம், புதிய நகரம், புதிய சந்தைகள், புதிய வீதிப் போக்குவரத்து என்பன அமைக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயத்தினுள் குடியேற்றங்களை நிறுவும் போது பின்வரும் நிலைமைகளில் உள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

- நீர்த்தேக்கங்களுக்கு அடியில் அவர்களின் நிலம் அமிழ்ந்ததினால் இடம்பெயர்ந்தவர்கள்
- மகாவலி வலயத்தினுள் முன்னரே வசித்தவர்கள்.
- நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயக் குடும்பங்கள்
- பிரதேசத்திற்கு வருகை தந்த விவசாயிகள் அல்லாத குடும்பங்கள் (வியாபாரம், கைத்தொழில் உற்பத்தி நோக்காக வந்தவர்கள்)
- மேலதிக பயிர்ச் செய்கைக்காக வந்த விவசாயக் குடும்பங்கள் (மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை)

மகாவலிப் பிரதேச அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் போது அக்கால கட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட உணவு நெருக்கடிக்கு முகங்கொடுப்பதும், உலக சந்தையில் அரிசியின் விலை அதிகரிப்பால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைத்துக் கொள்வதும் இத்திட்டத்தின் நோக்கமாக இருந்தது. மகாவலி வலயங்களில் தாபிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றங்களால், நெல் உற்பத்திக்கும் பிற விவசாய உற்பத்திகளுக்கும் பங்களிப்பு வழங்கப்பட்டது. கீழ் மகாவலி பிரதேசத்திலும், உடவளவை பிரதேசத்திலும் 2000ஆம் ஆண்டு நெல் உற்பத்தியானது, தேசிய நெல் உற்பத்தியில் 20% - 25% மான பங்களிப்பைக் காட்டியது (Abhayaratne 2005) இதற்கேற்ப இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட மகாவலி அபிவிருத்திப் பிரதேசம் ஒரு சிறப்பிடம் பெறுவதைக் காணலாம்.

மகாவலிப் பிரதேச அபிவிருத்தித்திட்டமானது,

- பல மாவட்டங்களையும், மாகாணங்களையும் உள்ளடக்கிப் பரந்து காணப்படுகின்றது.
- பல்நோக்கு அபிவிருத்தியின் இலக்கை அடைந்து கொண்டு மேலும் அபிவிருத்தி அடைந்து வரும் திட்டமாகவும் விளங்குகிறது.
- வலுசக்தி, உணவு, வேலையின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பங்களிப்புச் செய்யும் மகாவலிப் பிரதேச அபிவிருத்தியானது ஏனைய பிரதேச அபிவிருத்திகளிலும் பார்க்க முக்கியத்துவம் வாய்ந்தது

மகாவலி அபிவிருத்திப் பிரதேசங்களிடையேயும் அபிவிருத்தி ரீதியாக பிரதேச வேறுபாடுகளை இனங்காணலாம். உதாரணமாக முதன் முறையாகத் தாபிக்கப்பட்ட H வலயத்தினதும் C,B வலயங்களிடையேயும் விவசாயச் சூழலிலும் அதனோடு இணைந்த பொருளாதார நடவடிக்கைகளிலும் இவ்வேறுபாடுகளைக் காணலாம். வீதி அபிவிருத்தியிலும், சேவை வழங்கும் மையங்களின் வளர்ச்சியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பரந்த அடிப்படையில் நோக்கும் போது இங்கு குறிப்பிடப்பட்ட கீழ் மகாவலிப் பிரதேசங்கள், மேல் மகாவலிப் பிரதேசங்களை விடவும் குடியேற்றத்திட்ட அபிவிருத்தியில் முக்கியம் பெறுகின்றது. மேல் மகாவலிப்பிரதேசங்களில் அனேகமான பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வலயங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

**செயற்பாடு**

1. தேசப்படப்புத்தகத்தின் துணையுடன் மகாவலி கங்கை செல்லும் போக்கினை அவதானித்து அதன் வழியே அமையப் பெற்றுள்ள மாகாணங்களையும், மாவட்டங்களையும் பெயரிடுக.
2. மகாவலிப் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள புதிய நகர்கள் மூன்றினை மகாவலிப் பிரதேசத்தைக் காட்டும் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
3. மகாவலி கங்கை நீரினால் ஊட்டம்பெறும் பழைய குளங்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.
4. "மகாவலியினால் உதயமாகும் புது யுகம்" எனும் தலைப்பில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்காக ஒரு கட்டுரை வரைக.

**ஒப்படை**

ஆசிரியரின் ஒத்துழைப்புடன் மகாவலி நீர்த்தேக்கம் ஒன்றின் மாதிரி அமைப்பொன்றை தயார் செய்து பாடசாலை வருடாந்த பொருட்காட்சியில் காட்சிப்படுத்துக.


## வடக்குப்பிரதேசம்

- இலங்கையின் வட பிரதேசத்தினுள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற நிர்வாக மாவட்டங்களும், வட பிரதேசத்தில் அமைந்துள்ள சிறு தீவுக் கூட்டங்களும் அடங்கப் பெற்றிருப்பதை தேசப்படம் 3.5 காட்டுகிறது.

| | |
|---|---|
| வடக்குப் பிரதேசம் | • நிலப்பரப்பு 8290 ச.கி.மீ (உள்ளக நீர் நிலைகள் தவிர்ந்த)<br>• சனத்தொகை 1,146,000<br>• குடியடர்த்தி சதுர கி.மீற்றருக்கு 138 ஆகும். |

*(மூலம் : இலங்கை மத்திய வங்கி ~ 2007 கணிப்பீடு)*

**வடக்குப்பிரதேசம்**




தேசப்படம் 3:5

## வடக்குப் பிரதேசத்தின் பௌதிக சூழலைப் பற்றி அறிந்து கொள்வோம்.

வடக்குப் பிரதேச அபிவிருத்திப் போக்கின் தன்மை தொடர்பாக விபரங்களைச் சேகரிக்கும்படி ஆசிரியர் மாணவர்களை குழுக்களாகப் பிரித்தார். அக்குழுவினர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும், புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் வழங்கினார். இவற்றை ஆதாரமாகக் கொண்டு மாணவர்களால் முன் வைக்கப்பட்ட அறிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

### வடக்குப் பிரதேசத்துக்கே உரித்தான பௌதிக பண்புகள்

**பனை மரம்**



உரு 3:5

- வருடாந்த மழைவீழ்ச்சி 1000 -1500 மி.மீ. வரை ஆகும்.
- கூடுதலான மழை பெறப்படுவது வடகீழ் பருவக்காற்று காலத்திலாகும்.
- வருடாந்த சராசரி வெப்பநிலை $25^0c - 27.5^0c$ ஆகும்.
- வருடத்தில் நீண்ட வரட்சி காலம் நிலவு-கிறது.
- இலங்கையின் காலநிலை வலயப்பகுப்பில் இப்பிரதேசத்தின் அதிகமான பகுதி உலர் வலயத்திற்கும் மன்னாரை அடுத்துக் காணப்படும் சிறு பகுதி அரைகுறை வறள் வலயத்திற்கும் உரித்தாகின்றன.
- தரை மேற்பரப்பில் நீர் வழிந்தோடிச் செல்லும்தன்மை மிகவும் குறைவு. இப்பிரதேசத்தினை ஊடறுத்து ஓடுகின்ற சிறு அருவிகள் கூட அதிக வரட்சியான காலத்தில் வற்றிவிடும்.
- கனிய மணல், மயோசின் கால சுண்ணாம்புப் படிவுகள் இங்கு பெருமளவில் காணப்படுகின்றன.
- யாழ் குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மண் வளம் குறைந்ததாகவே காணப்படுகிறது. ஆயினும் சுன்னாகம், சாவகச்சேரி, போன்ற பிரதேசங்களில் வளமான செம்மண், மஞ்சள் லற்றசோல் மண் வகையும் ஏனைய பகுதிகளில் விவசாயத்திற்குகந்த வளமான மண்ணும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் இயற்கைத்தாவரமாக பனைமரம் விளங்குகிறது.

- இப்பிரதேசத்தின் பெருமளவு பகுதிகள் காடுகளால் மூடப்பட்டுள்ளன.
- கூடுதலான நிலப்பரப்பு கரையோரச் சமவெளியாகும்.
- தீவுகள் பல காணப்படுகின்றன.
- மீன்பிடி இப்பிரதேசத்தின் பிரதான வளமாகும்.

வடக்குப் பிரதேச பௌதிக பண்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்த சரவணனையும் அக்குழுவினரையும் ஆசிரியை பாராட்டினார். அதன் பின் B குழுவின் ஆக்கத்தை குழுவின் தலைவி மாதவி சமர்ப்பித்தார். அக்குழுவின் ஆக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது.

**வடக்குப் பிரதேசத்தின் மானிட செயற்பாடுகளின் தன்மை**




உரு 3.6

மேற்படி குழு சமர்ப்பித்த ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து வடக்குப் பிரதேசத்தின் பௌதிக மற்றும் மானிடச் செயற்பாடுகள் தொடர்பாக நீங்கள் ஓரளவு விளக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். சரவணனால் முன்வைக்கப்பட்ட அறிக்கையை நன்றாக வாசித்து வடக்குப்பிரதேசத்தின் பௌதிக சூழலுக்கும் மானிடச் செயற்பாட்டுக்குமிடையே உள்ள தொடர்புகளை விளங்கிக் கொள்ளுங்கள்.

**வடக்கின் எழில்மிகு கடற்கரை**




உரு 3:7

**பனை சார்ந்த உற்பத்திகள்**



உரு 3:8

**வடக்குப் பிரதேசக்கைத்தொழில்கள்**




உரு 3.9

இவ்வாறான கைத்தொழில்கள் இங்கு உருவாவதற்கு செல்வாக்கு செலுத்தியிருப்பது இப்பிரதேசம் தன்னகத்தே கொண்டுள்ள தனித்துவமான பௌதிக பண்புகளாகும். அவ்வாறான விஷேட பௌதீக பண்புகள் சில கீழே காட்டப்படுகின்றன.

| | |
|---|---|
| சீமெந்து | • தேவைப்படும் மூலப்பொருட்களில் ஒன்றான மயோசின் கால சுண்ணக்கல் படிவுகள் இலங்கையில் வடமேல் பிரதேசம் பூராகவும் காணப்படுகின்றது. |
| கனிப்பொருள் | • யாழ்குடா நாட்டின் கிழக்குக் கடற்கரையோரமாக சிலிக்கா படிவும் வடக்கே நாயாறு களப்பை அண்டிய பகுதிகளில் கனிய மணலும் ஒட்டிசுட்டான் பகுதிகளில் களிமண் படிவுகளும் காணப்படுகின்றன.<br>• வட பகுதியில் சமாதானம் நிலவுவதால் கனியவள ஏற்றுமதியினால் தற்போது வரமானத்தை பெறகூடியதாகவுள்ளது. |
| மீன்பிடிக் கைத்தொழில் | • ஆழமற்ற கடற்பகுதியும், பேதுரு கடலடித்தள-மேடையும் யாழ்கடனீரேரியும் மீன்பிடிக்கைத்-தொழிலுக்கு பரந்த வளமாக விளங்குகின்றன.<br>• முத்துகுளிக்கும் நடவடிக்கையும் சிறந்த ஆதாயமார்க்கமாக உள்ளது. |
| சுற்றுலாத்துறைக் கைத்தொழில் | • தீவுகளை அண்டிக் காணப்படும் கரையோரங்களும், கிழக்குக்கடற்கரையும் (நீந்துவதற்கும், சுழியோடலுக்கும்), சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், நாகதீபம், மடுமாதா புனிதத்தலம் போன்றன சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் பிரதேசங்களாகும் |
| இரசாயனப் பொருள் | • இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட ஒரேயொரு அரசதுறை இரசாயனத் தொழிற்சாலை பரந்தனில் தாபிக்கப்பட்டுள்ளது. |
| அரிமரத்தொழில் | • மரம் சார்ந்த கைத்தொழில் தொடர்பாக உலர்வலய பருவக்காற்று காடுகள் பெரும் பங்களிப்பை வகிக்கின்றன. இக்காடுகள் இப்பிரதேசத்திலேயே அதிக அளவில் எஞ்சியுள்ளமை குறிப்பிடத்தக்கது. |
| உப்புக் கைத்தொழில் | • ஆனையிறவு |

எது எவ்வாறிருப்பினும் யுத்த சூழ்நிலைமை காரணமாக ஏறக்குறைய மூன்று தசாப்த காலமாக இப்பிரதேசக் கைத்தொழில் அமைப்புக்கள் எவ்வித உற்பத்தியிலும் ஈடுபடவில்லை. இவ்வறிக்கையை முன்வைத்த குழுவிற்கு பாராட்டுத் தெரிவித்த ஆசிரியை வடக்குப் பிரதேசம் தொடர்பாக மேலும் சில தகவல்களை முன்வைத்தார்.

## உட்கட்டமைப்பு வசதிகள்

| | |
|---|---|
| • துறைமுகம் | காங்கேசன்துறை |
| • விமான நிலையம் | பலாலி, வவுனியா, இவை தற்போது பாதுகாப்புத் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன. |
| • பிரதான வீதி | யாழ்ப்பாணம், கண்டி, A9 பாதையும் அதனுடன் இணைந்த வீதி வலைப்பின்னலும். |
| • புகையிரத வீதி | வடக்குப் புகையிரத வீதி தாண்டிக்குளம் வரையும் மற்றும் மதவாச்சியையும் தலைமன்னாரையும் இணைக்கும் புகையிரத வீதி, யாழ்ப்பாணத்துக்கான புகையிரத வீதி மீள உருவாக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றன. |
| • உயர் கல்வி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா வளாகம் |
| • தகவல் தொடர்பு | கிளிநொச்சி மாவட்டத்தில் கொக்காவில் என்ற இடத்தில் இலங்கையில் உயரமான தகவல் தொடர்பபபாடல் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கின்றன. |

இவ்விசேட வசதிகளுடன் இலத்திரனியல் தொலைத் தொடர்பாடல் வலையமைப்பினூடாக அண்டை நாடான இந்தியாவிலிருந்து ஒலிபரப்பப்படும் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலை வரிசையூடாக யாழ்ப்பாண மக்கள் நன்மையடைகின்றனர். மேலும் மீன்பிடித் தொழில் முன்னேற்றகரமாக மேற் கொள்ளப்படுகின்றது. அட்டவணை 3.2 ஐப் பார்க்கவும்.

**வட பிரதேச மீன்பிடித் தொழிலுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள்:**

| மாவட்டம் | மீன் கரை சேர்க்கும் நிலையங்கள் | ஐஸ்கட்டி உற்பத்தி நிலையங்கள் |
|---|---|---|
| முல்லைத்தீவு | 45 | 3 |
| யாழ்ப்பாணம் | 83 | 12 |
| மன்னார் | 24 | 3 |

அட்டவணை 3.2

*மூலம் : இலங்கை நில அளவைத் திணைக்களம்*

நாட்டில் எந்தவொரு பிரதேசத்தினதும் அபிவிருத்திப் போக்கினை ஆய்வுக்குட் படுத்தும் போது அங்கு ஏற்படும் பிரச்சினைகளையும், இடர்ப்பாடுகளையும்

இனங்கண்டு கொள்ள முடியும். வடக்குப் பிரதேசத்திலும் (அபிவிருத்தி தொடர்பான) இவ்வாறான பிரச்சினைகளும், இடர்ப்பாடுகளும், தடைகளும் நிலவுகின்றன.

- ஆரம்பத்தில் துலாக்கிணறு மூலமும் மற்றும் மழை நீரைக் கொண்டும் விவசாயம் செய்த விவசாயிகள் தமது சுயதேவைக்கு மேலதிகமாக உற்பத்திகளை மேற்கொண்டனர். ஆயினும் தற்பொழுது நவீன தொழினுட்ப நீர்ப்பாசன முறையைக் கையாண்டு வர்த்தகப் பயிர்ச் செய்கையில் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளனர். உதாரணமாக மிளகாய், சின்ன வெங்காயம், திராட்சை, காய்கறி, பழவகைகள் போன்றவற்றை விவசாயம் செய்கின்றனர்.
- வட பிரதேசத்திற்கே தனித்துவமான கைத்தொழிற்சாலைகள் பலவற்றை கண்டு கொண்ட போதிலும் சீமெந்து, இரசாயனத் தொழிற்சாலைகள் கனிய மணல் உற்பத்தித் தொழிற்சாலை போன்றவை இரு தசாப்த காலங்களுக்கு மேலாக முற்றாக செயலிழந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
- மானிய விலையில் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படுகின்றமையால் உற்பத்தி அதிகரிக்கின்றமை.

**வட பிரதேச அபிவிருத்தியில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளும், தடைகளும் அவற்றை வெற்றி கொள்ள கையாண்ட முறைகளும்.**

வடக்குப் பிரதேசத்தில் நிலை கொண்ட யுத்த நிலைமையும் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தமும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணங்களாகும். ஆயினும் தற்போது வடக்குப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவையாவன.

- போக்குவரத்து வலைப்பின்னலை இயல்பு நிலைக்கு கொண்டு வரல்.
- வவுனியா – காங்கேசன் துறை புகையிரத வீதியைப்புனரமைப்புச் செய்தல்.

  2011 ஓமந்தை வரை புனரமைப்ப நிரைவேறியள்ளது.
- கைத்தொழிற்சாலைகளை மீளக் கட்டியெழுப்புதல்.
- உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- இடம்பெயர்ந்தவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல். வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் கட்டமைப்புத்திட்டத்தின் கீழ் (NEHRP) வடக்குப் பிரதேசத்தில் 2004–2009 இடைப்பட்ட காலத்தினுள் நிர்மாணிப்பதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட வீடுகளில் 2007இல் 31.64%மே கட்டிமுடிக்கப்பட்டன.

இதன்படி வடக்குப்பிரதேச அபிவிருத்தியில் அரசுடன் உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினது கூடிய கவனம் ஈர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் 2008 ஆம் ஆண்டு முதல் தற்போதைய அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மீளவும் புத்தெழுச்சியை ஏற்படுத்தும் வகையில் "வடக்கின் வசந்தம்" என்ற தொனிப் பொருளில் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**செயற்பாடு**

1. வடக்குப்பிரதேசத்தில் பரந்து காணப்படும் கனிய வளங்களை தேசப்படமொன்றில் குறித்துப் பெயரிடுக.
2. வடக்குப் பிரதேசத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரும் பிரதேசங்களை உள்ளடக்கிய ஓர் பட்டியலைத் தயாரிக்கும்.
3. வடக்குப் பிரதேசத்தின் குடா நாட்டுக்கும் ஏனைய பகுதிகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகள் சிலவற்றை எழுதுக.
4. வட பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் இலங்கை அரசு நடைமுறைப்படுத்தும் "வடக்கின் வசந்தம்" என்ற நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பல்வேறு ஊடகங்கள் வாயிலாக உமக்கு கிடைக்கும் தகவல்களை உள்ளடக்கி ஒரு கோவை தயாரிக்குக.

## ஊவாப் பிரதேசம்

ஊவாப் பிரதேசம் கண்டி இராச்சிய காலப்பகுதியில் விவசாயத்துறையில் மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்த பிரதேசமாகும். அக்கால கட்டத்தில் ஒரு லட்சம் வயல் நிலங்கள் இப்பகுதியில் காணப்பட்டமையால் இப்பிரதேசம் "வெல்லஸ்ஸ" எனும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. குன்று, மலைத்தொடர், கணவாய், நீர்வீழ்ச்சி, குத்துச்சாய்வு போன்ற பௌதிக உறுப்புக்கள் பல ஒருங்கிணைந்து காணப்படும் இப்பிரதேசம் இயற்கையினால் பாதுகாப்பைப் பெற்ற போதிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் பௌதிக சூழல் தடையாக அமைகின்றது.

- பதுளை, மொனராகலை மாவட்டங்கள் இப்பிரதேசத்தினுள் அடங்குகின்றன.
- பரப்பு : 8335 சதுர கிலோமீற்றர்கள் (உள்ளக நீர் நிலைகள் தவிர்த்து)
- சனத்தொகை : 1257000
- குடியடர்த்தி : சதுர கிலோ மீற்றருக்கு 151


*மூலம் : இலங்கை மத்தியவங்கி - 2007*

இப்பிரதேசம் தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாடப்பொறுப்பாசிரியரினால் மாணவர்களுக்கு இப்பிரதேசத்திலேயே பிறந்து உயர்கல்வி கற்று, புதிய ஆசிரியராக நியமனம் பெற்றுவந்த திரு. வருணன் அவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார். அவர் மூலம் கிடைக்கப்பெற்ற தேசப்படங்கள், இறுவட்டு (CD) மேலும் அவருடைய

உரையாடல்கள் போன்றவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற விடயச் சுருக்கங்கள் ஆசிரியரினால் வகுப்பறைச் சுவரில் பின்வருமாறு காட்சிக்கு வைக்கப்பட்டது.

- ஊவாப்பிரதேசத்தின் பெரும் பகுதி கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றர் தொடக்கம் 300 மீற்றருக்கு இடைப்பட்ட பிரதேசத்தினுள் அடங்குகிறது. 2036 மீற்றர் உயரமுடைய நமுனுகுல மலைச்சிகரம் இப்பிரதேசத்தினுள்ளே அமைந்துள்ளது.
- மழைவீழ்ச்சி வடகீழ் பருவகாற்றின் மூலம் பெறப்படுவதுடன் பெரும் போக நெல் விவசாயம் மேற்கொள்ளப்படுவதும் இக்காலப் பகுதியிலேயாகும்.
- காலநிலை வலயப் பிரிவுகளில் உலர்வலய உயர்நிலமும் உலர்வலயத் தாழ்நிலமும் இப்பிரதேசத்தினுள் அடங்குகின்றன.
- வெலிமடை மேட்டு நிலம், நமுனகுல மலைத்தொடர் போன்ற உயர் நிலங்களிலிருந்து உற்பத்தியாகி பல்வேறு திசைகளிலும் பாய்ந்-தோடுகின்ற பெரிய, சிறிய ஆறுகளால் இப்பிரதேசம் போசிக்கப்படுகின்றது.
- இப்பிரதேசம் கணவாய்கள், காடுகள், நீர்வீழ்ச்சி, குத்துச்சாய்வு, போன்ற எழில் மிகு இயற்கை அம்சங்களால் பாதுகாப்புப்பெற்றுள்ளது.
- உல்லாசப் பயணக்கைத்தொழிலுக்கு இரம்மியமான இவ்வியற்கைத் தோற்றங்கள் வாய்ப்பாக அமைந்துள்ளன.
- பாரிய அளவில் கனிய வளங்கள் காணப்படாத போதிலும் இரத்தினக்கற்கள், மைக்கா, இரும்புத்தாதுப் படிவு, படிகம் (Quartz) போன்றன சிறிய அளவில் காணப்படுகின்றன.

**துன்ஹிந்த நீர்வீழ்ச்சி**



உரு 3.10


**சரிவுக்குள்ளாகிய பிரதேசம்**



உரு 3.11

- மழைக்காலத்தில் மண் வழுக்குகை, பாறை வழுக்கல், மண்சரிவு போன்ற அனர்த்தங்களுக்கு மென்சாய்வான பிரதேசங்கள் உட்படுகின்றன. மனித செயற்பாட்டுக்கு பொருத்தமற்ற நிலப்பகுதிகள் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன.
- மொனராகலைப் பிரதேசத்தில் வருடந்தோறும் ஏற்படும் வரட்சியான காலநிலை அப்பிரதேச மனித வளத்தை கவருவதற்குப் பதிலாக வெளியேறச் செய்கிறது.
- இப்பிரதேசத்தின் சனத்தொகைப் பரம்பலிலும் மானிடச் செயற்பாட்டிலும் பௌதிகச் சூழல் பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஊவாப் பிரதேசம்**




தேசப்படம் 3.6

*மூலம்: ஜெயா வெளியீடு*

இவ்வுரையாடலையடுத்து மாணவர்களின் கவனத்தை தேசப்படம் 3.6 க்கு திசைதிருப்பிய வருணன் ஆசிரியர் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பௌதிக சூழலானது மானிடச் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாகவும் விளக்கங்கள் கொடுத்தார்.

## பிரதேசத்தின் அபிவிருத்தியில் பௌதிக, மற்றும் மானிடச் செயற்பாடுகளின் தாக்கம்.

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இப்பிரதேசத்தின் வீதியமைப்பு மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. தரைத்தோற்ற முரண்பாடுகள் இதற்கு பெருந்தடையாக அமைகின்றன. பிரவேசிக்கும் வீதிகளின் நிலைமைகளைப் போன்றே உட்கட்டமைப்பு வசதிகளிலும் கூட குறைபாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன. பிரதேசத்தின் பிரதான வீதி தவிர்ந்தபிற வீதிகளில் பெரும்பாலானவை மலைகள், பள்ளத்தாக்குகள், போன்றவற்றினூடாக செல்லும் சிறு வீதித் தொகுதிகளாகக் காணப்படுகின்றன. மேலும் மழைக் காலங்களில் மண்சரிவு, பாறை வழுக்குகை, நிலவழுக்குகை போன்ற காரணிகளால் பதுளை மாவட்டத்தில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இவை இப்பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் தடைகளாக விளங்குகின்றன.

ஆயினும், மொனராகலை மாவட்டத்தில் இவ்வாறான இடையூறுகள் ஏற்படுவதில்லை. பதுளை மற்றும் மொனராகலை நகரப் பகுதிகளிலிருந்து விலகி தூரத்தில் இருக்கும் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்தளவில் காணப்படுவதுடன் குடியடர்த்தியும் குறைந்த அளவாகவே உள்ளது.

பதுளை மாவட்டத்தின் நகர்ப்புறங்களின் குடித்தொகையையும், நகரங்களின் எண்ணிக்கையையும் மொனராகலை மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகளவாக காணப்படுகிறது. பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை என்பன பிரதான நகரங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. ஆயினும் மொனராகலை மாவட்டம் மொனராகலையை மட்டுமே பிரதான நகராகக் கொண்டிருக்க பசறை, மெதகம, பிபிலை, ஹாலிஎல, வெலிமடை போன்றன சிறிய சேவை மையங்களாக உள்ளன.

ஊவாப்பிரதேசத்தின் குடியிருப்பும், குடித்தொகையும் பரவிக்காணப்படும் தன்மையிலும் சில தெளிவான வேறுபாடுகளைக் காணலாம். ஊவாப்பிரதேசத்தை முழுமையாக எடுத்து நோக்கும் போது நகர்ப்புற சனத்தொகையானது குறைவாகக் காணப்படுகின்றது. மொனராகலை மாவட்டத்தின் தெற்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் மிகவும் குறைந்த மட்டத்தில் சனத்தொகை பரவிக் காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் கிராமங்களில் வாழும் மக்கள் தொகை சிறிய கிராமங்களை அண்மித்துப் பரவிக்காணப்படுகின்ற அதே வேளை பதுளை மாவட்டத்தில் கிராமங்களிலும், தோட்டப்புறத்தை அடுத்தும் பரவிக் காணப்படுகின்றது.

இப்பிரதேசங்களில் வாழும் மக்கட் தொகையில் இனரீதியாகவும் சில வேறுபாடுகளை அவதானிக்கலாம். பதுளை மாவட்டத்தில் சிங்கள மக்கள் கூடுதலாகவும் இந்திய வம்சாவழித் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் குறிப்பிடத்தக்களவிலும் வாழ்கின்றனர். எனினும் மொனராகலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். ஏனைய இனத்தவர்கள் இம்மாவட்டங்களில் மிகச்சிறிய அளவிலேயே வாழ்கின்றனர்.

உரு 3.11 இனை அவதானிக்கும் போது இப்பிரதேசத்தின் தரைத்தோற்ற வேறுபாடுகளும், காலநிலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி போன்றவைகளும் மானிடச் செயற்பாடுகளில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பது உங்களுக்குப் புலனாகும்.

**செயற்பாடு**


1. இலங்கை புற உருவப்படமொன்றில் ஊவாப் பிரதேசத்திற்கு உரித்தாகின்ற மாவட்டங்களை நிழற்படுத்துக.
2. ஊவாப்பிரதேசத்தின் பௌதிக சூழலுக்கேற்ப கட்டியெழுப்பப்பட்டிருக்கும் மானிடச் செயற்பாடுகள் மூன்றினை எழுதுக.
3. பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கிடையே அபிவிருத்திக் கோலத்தில் காணப்படும் வேறுபாடுகள் எவை?

இப்பிரதேசத்தின் விவசாய முயற்சிகளுக்கு மூல காரணமாக அமையும் நீர்ப்பாசன முறைமைகள் பற்றி அறிந்து கொள்வதும் முக்கியமான விடயமாகும். இப்பிரதேசத்தின் நீர்ப் பாசன முறைமைகளில் பாரிய நீர்ப்பாசன முறைமைகள், பாரிய அணைக்கட்டுக்கள், சிறிய அணைக்கட்டுக்கள் போன்றன அடங்குகின்றன. (பாரிய நீர்ப்பாசனத்திட்டம் என அழைக்கப்படுவது இப்பிரதேசத்தில் 80 ஹெக்டேயர்களுக்கு மேற்பட்ட நிலத்திற்கு நீர்வழங்கும் அமைப்பாகும்.)

ஊவாப்பிரதேசத்தில் இந்நீர்ப்பாசன முறைமைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பதுளை மாவட்டத்தில் சிறிய அருவிகளுக்கு குறுக்காக அணைகளைக் கட்டி நீர்ப்பாசனம் செய்யும் முறை ஆங்காங்கே காணப் படுகின்றது. இவை பெரும்பாலும் காய்கறி பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கே பயன்படுகின்றன. மொனராகலை மாவட்டத்தில் அத்திமலே, யுதகனாவ, ஹந்தப்பானாகல, மஹவெவ, அம்பேகமுவ போன்ற இடங்களில் பாரிய நீர்ப்பாசன முறைமைகள் முக்கிய இடம் பெறுகின்றன.

ஊவாப்பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக கடந்த இரு தசாப்த காலந்தொட்டு பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் கிராமங்களை மையப்படுத்தி அச்சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் உண்மையிலேயே சாதகமான பயன்களைத் தந்துள்ளன.

**அபிவிருத்திப் போக்கின் தன்மையில் பதுளை மொனராகலை மாவட்டங்கள்.**




உரு 3.12

இப்பிரதேசத்து மக்களின் வாழ்க்கையை தரமுயர்த்தச் செயற்படுத்தும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், விவசாயம், கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற தலைப்பின்கீழ் வருணன் ஆசிரியரால் நிரற்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## விவசாயத்துறை முன்னேற்றம்.

- பிரதேசத்தின் நீர்ப்பாசன முறையானது அணைக்கட்டுகளுக்கு குறுக்காக சமவுயரக்கோட்டு முறையில் வாய்க்கால்கள் அமைத்துப் பயிர்ச்செய்கை நிலங்களுக்கு நீரை வழங்குவது (பிரதேச சபைகள் மூலம் இந்த அணைக்கட்டுகளும் வாய்க்கால்களும் வருடாந்தம் மீள் செப்பனிடப்படும்)
- சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்கள் மூலம் சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகளைப் பாதுகாத்தல்.
- பிபிலைப் பிரதேசத்தில் தோடைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தல்.
- கமநல அமைப்புகளினூடாக இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தொழிலை அபிவிருத்தி செய்தல்.
- பதியதலாவை, மொனராகலைப் பிரதேசங்களில் மாதிரி மரமுந்திரிகை பதப்படுத்தல் நிலையங்களை ஆரம்பிப்பதுடன் மரமுந்திரிகை கொள்வனவு செய்யும் நிலையங்களையும், நாற்று மேடைகளையும் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- குறைந்த வருமானம் பெறுபவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வசதி வாய்ப்புக்களை மேம்படுத்தல்
- சீனி உற்பத்திக்கான கரும்புப் பயிர்ச்செய்கைத்திட்டத்தை ஏற்படுத்துதல்

**மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை**



உரு 3.13

**கரும்புச்செய்கை**



உரு 3.14

### கைத்தொழில்

- கிராமியக் கைத்தொழிலை முன்னேற்றுவதற்கு உதவி வழங்கும் அதேவேளை தனியார் துறைக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் ஊக்கமளித்தல். (தைத்த ஆடை, புடைவை, மரம்)
- பிரதேசத்தின் பௌதிக மற்றும் வரலாற்றுச் சூழலுடன் இணைந்ததாக சுற்றுலாத்துறைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு முயற்சி எடுத்தல் (முதியங்கனை, மஹியங்கனை, புறுதுவகலை, மாளிகாவில, போன்ற சமய வழிபாட்டுத்தலங்களையும், பண்டாரவளையை அண்டிக்காணப்படும் இரம்யமான இடங்களையும் சுற்றுலாத்துறைக்காக அபிவிருத்தி செய்தல்).
- பிபிலை மற்றும் சியம்பலாண்டுவ பகுதிகளில் கருப்பஞ்சீனிக் கைத்தொழில் ஆலைகளை நிர்மாணித்தல்.

### உட்கட்டமைப்பு வசதிகள்

- பதுளை, மொனராகலை, மகியங்கனை போன்ற நகரங்களைத் திட்டமிட்டு அபிவிருத்தி செய்தல் (பஸ்தரிப்பு நிலையம், வைத்தியசாலை, அஞ்சல் அலுவலகம், மாநாட்டு மண்டபங்கள்).
- மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம், விலங்கு வேளாண்மை, போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- சமூக நீர் வழங்கலும், சுகாதார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தலும். (இதன் கீழ் நீர்வளத்தைப் பாதுகாப்பதும் நீர் விநியோகத்தை மேற்கொள்ளுவதும் அடங்கும்)
- கிராமப்புற வீதிகள், நீர்ப்பாசனம், ஊடுபயிர்ச்செய்கை போன்றவற்றை அபிவிருத்தி செய்யும் திட்டம்.
- கிராமிய நீர்மின் திட்டத்தினை ஏற்படுத்துதல் உ+ம் : அகிறியா உனகொல்ல, எலஅலொகலாகல, யட்டிவர அரவகும்பர
- உயர்கல்வி மேம்பாட்டுக்காக ஊவாவெல்லச பல்கலைக்கழகத்தையும் தொழில்சார் பயிற்சிகளுக்காக தொழில்நுட்பக் கல்லூரிகளினது வசதிகளையும் விஸ்தரித்தல்.

### சுற்றாடல் பாதுகாப்பு

- சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களில் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல். (மட்பாதுகாப்பு, நீர்வளப்பாதுகாப்பு, ஆற்று நீரேந்து பகுதிகளில் காடுவளர்ப்பு)

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விவசாயம், கைத்தொழில், சமூகம், போன்ற அனைத்து அம்சங்களிலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரதேசம் தொடர்பாக நன்கு அறிந்த வருணன் ஆசிரியர் அளித்த விளக்கத்திற்கு மாணவர்களும், ஆசிரியர்களும் நன்றி கூறினர்.

**செயற்பாடு**

1. ஊவாப்பிரதேசத்தை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தியானது மந்த கதியில் செல்வதற்கான காரணிகள் மூன்றினை எழுதுக.
2. ஊவாப்பிரதேசத்தில் விளையும் காய்கறிகளையும், பழவகைகளையும் பட்டியற்படுத்துக.
3. "ஊவாப்பிரதேசத்தின் மனங்கவர் இயற்கைக்காட்சிகள் எம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றன" எனும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.

## தெற்குப் பிரதேசம்

இலங்கையின் அபிவிருத்திப் போக்கின் தன்மையில் தெற்குப் பிரதேசம் தொடர்பாக எமது கவனத்தைச் செலுத்துவோம்.

பாடப்பொறுப்பாசிரியர் இப்பாடத்தை விளக்குவதற்கு பின்வரும் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தியிருந்தார். செவ்வந்திபுரம் மகா வித்தியாலயத்தில் 12-13ம் தரங்களில் கல்வி கற்கும் ஊடகப்பிரிவு மாணவர்களினால் தயார் செய்யப்பட்டிருந்த "தென்னிலங்கை நவோதயத்தின் முன்னோக்கு" என்கின்ற வானொலி ஒலி நாடாவைக் கேட்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கினார்.

**ஒலி பரப்பாளர்** : *உங்கள் அனைவருக்கும் இனிய வணக்கம். எமது கலையகத்திற்கு வருகை தந்துள்ள விஷேட அதிதியான தென் பிராந்திய அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருக்கும் நிறைவேற்றுப் பணிப்பாளர் மதிப்பிற்குரிய குலசேகர அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம். பணிப்பாளர் அவர்களே, எங்களுக்கு முதலில் தென் பிராந்தியம் என அழைக்கப்படுவது எப்பிரதேசம் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.*

**குலசேகர** : *வணக்கம்! ஆம் இப்பிரதேசத்திற்கு காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் உரித்தாகின்றன. இப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு உள்ளூர் நீர் நிலைகள் நீங்கலாக 5383 சதுர கிலோ மீற்றர்களாகும். 2007ஆம் ஆண்டு மத்தியவங்கியின் சமூக பொருளாதார புள்ளி விபரங்களின்படி சனத்தொகை 2,391,000 ஆகும். குடியடர்த்தியானது சதுர கிலோ மீற்றருக்கு 444 ஆகும்.*

**ஒலி பரப்பாளர்** : *குலசேகர அவர்களே! இப்பிரதேசத்தின் புவியியற் பின்னணி பற்றியும் சிறிது விளக்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும்.*

**குலசேகர** : *காலநிலை வலய அடிப்படையில் பார்க்கின்ற போது இப்பிரதேசத்தில் காலி, ஈரவலயத்திற்கும் அம்பாந்தோட்டை உலர் வலயத்திற்கும் மாத்தறை இவ்விரு வலயத்தினுள்ளும் அடங்குகின்றது.*

காலி, மாத்தறைக்கான வருடச்சராசரி மழைவீழ்ச்சி 1500 மி.மீ – 4000 மி.மீ வரையிலாகும். வருடந்தோறும் இப்பிரதேசம் வெள்ளப்பெருக்கிற்கு உள்ளாகின்றது. அம்பாந்தோட்டையில் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியாக 750 மி.மீ – 1500 மி.மீ வரை பெறப்படுகின்றது. ஆயினும் நான்கு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு கடும் வரட்சி நிலைக்கு இப்பிரதேச மக்கள் முகங் கொடுக்கிறார்கள்.


- இப்பிரதேசம் நீண்ட அழகான கடற்கரையோரத்தைக் கொண்டிருப்பது விஷேட அம்சமாகும்.
- தரையமைப்பைப் பொறுத்த வரையில் கரையோரப் பிரதேசம் சமதரை-யான அமைப்பையும் நாட்டின் உட்புறமாக செல்லும் போது தரை படிப்படியாக உயர்ந்து செல்கின்ற பண்பையும் காணலாம்.
- தற்போது தென்னிலங்கை அபிவிருத்தித்திட்டம் புதிய உத்வேகத்துடன் செயற்படுகின்றது. இங்கு பௌதிக சூழலுக்கேற்ப மானிடச் செயற்பாடு-களில் பல வேறுபாடுகளைக் காணமுடியும். அதன்படி கரையோரச் சமநிலப் பகுதிகளில் அதிக குடியடர்த்தியும், உள்ளக மத்திய உயர் நிலப்பகுதியில் குறைந்த குடியடர்த்தியும் காணப்படுகின்றது.

**ஒலி பரப்பாளர்** : பிரதேசத்தில் காணப்படும் பௌதிக வளங்கள் யாவை?

**குலசேகர** : இப்பிரதேசத்தின் பௌதிக வளங்கள் பற்றி விளக்குவதாயின் கரையோரப் பிரதேசங்கள் மைக்கா படிவுகளும், கனிய மணலும், மற்றும்

முருகைக்கல், சுண்ணக்கல், இரத்தினம், கெயோலின், செங்கல், ஓடுதயாரிப்பதற்கான களிமண் வகையும் தாராளமாகக் காணப்படுகின்றன. மழை நீரைக் கொண்டும் நீர்ப்பாசனத்தைக் கொண்டும் அபிவிருத்தி செய்யக்கூடிய வளமான மண்ணை இப்பிரதேசம் கொண்டுள்ளது.

**தென் பிரதேசம்**




தேசப்படம் 3.7

**செயற்பாடு**


1. மாகாண, மாவட்ட எல்லைகளைக் கொண்ட இலங்கைப் புறவுருவப் படமொன்றில் தெற்குப் பிரதேசத்திற்குள் அடங்கும் மாவட்டங்களைக் குறித்துப் பெயரிடுக.
2. இப்பிரதேசத்தில் அடங்கும் காலநிலை வலயங்களைப் பெயரிடுக.

தெற்குப் பிரதேசம் தொடர்பாக விளக்கம் கொடுத்த குலசேகர அவர்கள் இப்பிரதேசம் தொடர்பாக மேலும் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக சில துண்டுப் பிரசுரங்களை மாணவர்களுக்கு வழங்கினார். இத்துண்டுப் பிரசுரங்களை ஆதாரமாகக் கொண்டு மாணவர்கள் தெற்குப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான விடயங்களைக் கோவைப்படுத்தினர்.

## தெற்குப் பிரதேசத்தின் முக்கிய கைத்தொழில்கள்

தென்மாகாண கிராமிய அபிவிருத்திக்காக செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்.

- 1991இல் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) யின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட "தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்திட்டம்"
- மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாத்தறைக்கு "சீடா" அமைப்பின் உதவியுடனும் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு "நோராட்" அமைப்பின் உதவியுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள்.
- இலங்காகம, வாருகந்தெனிய, கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு கிராமிய மின் விநியோகத்திட்டங்கள் நான்கும் அத்தோடு நாதுகல அனல் மின் நிலையமும் தாபித்தல்.



உரு 3.15

- வீதிப் புனரமைப்புப் பணிகள்
- பாலங்களைத் திருத்தியமைத்தல், புதிய பாலங்களை நிர்மாணித்தல்.
- சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள்
- நாட்டின் உட்புறப்பகுதிகளுக்கு உப்பு நீர் ஊடுருவதை தடுப்பதற்கான திட்டம்.
- மீனவக் கிராமங்களைத் தாபித்தலும், மீனவச்சங்கங்களை உருவாக்கலும்.
- "கெசிட்டா" (மீன்களைப் பிடிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆக்கம்) எனும் புதிய தொழில்நுட்பத்தின் கீழ் சிங்கி இறால் வளர்ப்புக்கான திட்டம்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு–மாத்தறை அதிவேகப்பாதை இன்று காலிவரை நிறைவுசெய்யப்பட்டுள்ளது மாத்தறை–கதிர்காமம் வரையிலான உத்தேசிக்கப்பட்ட புகையிரதப் பாதையின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் மாத்தறை–திக்வல்லை வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வனைத்துத் திட்டங்களின் மூலமாகவும் எதிர்பார்க்கப்படுவது யாதெனில் கிராமத்தையும் கிராமத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதாகும்.

2004 டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக தெற்குப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் உள், வெளி நாடுகளிலுள்ள தனவந்தர்களிடமிருந்தும், அரசுகளிடமிருந்தும் பெருந்தொகையான பொருளுதவியும், நிதியுதவியும், ஒத்துழைப்பும் மட்டுமன்றி தொழில்நுட்பமும் உதவியாகக் கிடைத்தன. இதனை அடுத்து கடலோரக் கரையை அண்மித்துள்ள 100 மீற்றர் வரையான தரைப்பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனஞ் செய்து கரையோரத்தினைப் பாதுகாப்பதற்கும், சுனாமி முன் அபாய எச்சரிக்கை மையநிலையமொன்றினை நிறுவவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் தற்போதைய அரசின் அனுசரணையுடன் “தென்னிலங்கை அபிவிருத்தி” எனும் தொனிப் பொருளில் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திப்பணியொன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் சேதமடைந்த பாதைகளை சீரமைப்பதும் துறைமுகங்களை மீளமைப்பதும், விவசாயம், மீன்பிடித்தொழில் ஆகியனவற்றை முன்னேற்றமடையச் செய்து இப்பிரதேசத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுமாகும்.

வெவ்வேறு பட்ட தலைப்புகளின் கீழே கோவைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களிலிருந்து தெற்குப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

**மழை நீர் சேகரிக்கும் தாங்கி தயாரித்தல்**



உரு 3.16

**மழை நீர் சேகரித்து வைக்கும் தாங்கி**



உரு 3.17

## விவசாயத்தை முன்னேற்றுதல்.

- கரையோரமாக தெங்குப்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரன்ன, தங்கல்ல, மித்தெனிய இடங்களை விஷேடமாகக் கொண்டு அப்பகுதியைச் சிறு தென்னை முக்கோணப் பிரதேசமாகப் பெயரிட்டு தெங்குச் செய்கையை விருத்தி செய்தல்.

- புதிய பயிர்ச்செய்கையாக பனை மரத்தை அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு அறிமுகம் செய்து பனஞ்செய்கையை விருத்தி செய்தல் (இதேவேளை இலங்கையில் 20 இலட்சம் பனை மரங்கள், நடுகை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது).

  தகவல் :- மேலதிக பெருந்தோட்டப்பயிர் அபிவிருத்தி அமைச்சு


- காலி, மாத்தறை மாவட்டங்களில் தேயிலை, இறப்பர் மற்றும் கறுவாப் பயிர்ச் செய்கை தொடர்பாக ஆலோசனைகளும் கடன் வசதிகளும், உதவிகளும் பெற்றுக் கொடுத்து சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல்.
- இதற்கு மேலதிகமாக மிளகு, கோப்பி, போன்ற இடைப்பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதற்காக கமநல சேவை நிலையங்களினூடாக விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுத்தல்.
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தென்னையுடன் மரமுந்திரிகையும் நடுகை செய்தல்.

**கரும்புச் செய்கை**



உரு 3.18

**மரமுந்திரிகை உற்பத்தி**



உரு 3.19

## உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

- சேதமடைந்த புகையிரத வீதியை உள்நாட்டு தொழில்நுட்பம் மற்றும் சுதேச ஊழியத்தினைக்கொண்டு மிகக்குறுகிய காலத்தினுள் புகையிரதத் திணைக்களம் செப்பனிட்டு நிறைவு செய்துள்ளது.
- கொழும்பு மாத்தறைக்கிடையிலான புகையிரத பாதை இந்திய அரசின் உதவியுடன் மேலம் விருத்தி செய்தல்.
- சேதத்துக்குள்ளான பாலங்களையும், வீதிகளையும் புனரமைத்தல்.
- அம்பாந்தோட்டை சர்வதேசத்துறைமுகமும் புதிய நகரமும் நிர்மாணிக் கப்படல்.

- தனமல்வில, மத்தளையில் நிர்மாணிக்கப் படவிருக்கும் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தும் உத்தேசம்.
- காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, தனமல்வில ஊடாக செல்லும் பெருந் தெருக்களை விஸ்தரித்தல்.
- காலிக்கோட்டை, மாத்தறைக்கோட்டை ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்.



உரு 3.20

- காலி, வெலிகம, தெவிநுவர, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் காணப்படும் மீன்பிடித்துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.

## சமூக அபிவிருத்தி

- அநாதைகளுக்குப் புனர்வாழ்வளித்தல், வீடுகள், சொத்துக்களை, இழந்த குடும்பங்களுக்கு அரசின் அனுசரணையுடன் உதவி ஒத்துழைப்புக்களை வழங்கி மீள்குடியமர்த்தல்.
- றுகுணு பல்கலைக்கழகத்தை முன்னேற்றுதல்.
- சமூக நீர் வழங்கலும் பொதுச்சுகாதாரப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வரட்சியால் பாதிக்கப்படும் அம்பாந்தோட்டை மக்களுக்கு மழை நீர் சேகரிப்பு தாங்கிகளை அறிமுகம் செய்தலும்.

**பஸ் தரிப்பு நிலையம்**



உரு 3.21

**அம்பாந்தோட்டை நகர அபிவிருத்தி**



உரு 3.22

இங்கு இவ்வாறான இடங்கள் அமைந்திருப்பதால் மானிடச் செயற்பாடுகளும் அதற்கேற்ப உருவாகியுள்ளன. உதாரணமாக உல்லாசப் பயணிகளுக்காக ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதனோடு இணைந்து ஏனைய தொழில் வாய்ப்புக்களும் பெருகியுள்ளன. வியாபாரிகள், சாரதிகள், வழிகாட்டிகள் போன்றோர் பலர் இப்பிரதேசத்தில் உருவாகியுள்ளனர்.

**ஹிக்கடுவை பவளப்பாறை**



உரு 3.23

**ஊது துளை (Polow Hole)**



உரு 3.24

இவ்வாறான திட்டங்கள் மூலம் பிரதேசத்தின் பௌதிக சூழலுக்கு அமைய மானிடச் செயற்பாடுகளும் இசைந்து காணப்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ளலாம். தெற்குப் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எழும் பிரச்சினைகள்:

- அபிவிருத்திப் பணிகள், பெருந்தெரு விரிவாக்கல், புதிய நிர்மாணப் பணிகள் போன்றவற்றை ஆரம்பிக்கும் போது நிலத்தைப் பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகள்.
- வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நில்வளவ கங்கை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த இலக்கு அடைய முடியாமல் போனமை.
- ஏராளமான நிலப்பகுதி உவர் நீர்த்தாக்கத்துக்குள்ளாதல்.
- தரைக்கீழ் நீர் மட்டம் மிக ஆழத்திற்கு செல்லுதல்.
- பழைய விவசாய நிலங்கள் கைவிடப்படுதல்.

***அபிவிருத்திப் பணிகளின் போது நிலங்களை இழந்த மக்களுக்கு நட்ட ஈடு வழங்குவதும், மாற்று இடங்களைப் பெற்றுக் கொடுப்பதும் தற்போது அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.***

**செயற்பாடு**

1. தெற்குப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேறுபாடுகள் ஏற்படுவதற்கான காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக.

**ஒப்படை**

தற்போது அரசினால் தெற்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் நிறைவுறும் பணி ஒன்று பற்றிய தகவல்களைச் சேகரித்து உங்கள் களத்துறை ஏட்டில் பதிக.


## கிழக்குப் பிரதேசம்

இலங்கையின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் இப் பிரதேசத்தினுள் அடங்குகின்றன. மாகாண ரீதியாகப் பார்க்கும் போது இலங்கையின் கூடுதலான நிலப்பிரதேசத்தை இப்பகுதி கொண்டுள்ளது. இதன் மொத்த நிலப்பரப்பு 9622.07 சதுர கிலோ மீற்றர்களாகும். இது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 14.9% ஆகும். (உள்ளக நீர் நிலைகள் தவிர்ந்து) சனத்தொகை 1,578.000% ஆகக் காணப்படுவதுடன் இது நாட்டின் மொத்த சனத்தொகையின் 7.9% ஆகும். குடி அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 169 ஆகும்.

கிழக்குப் பிரதேச கடலோரத்தில் திருகோணமலை, வாழைச்சேனை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் துறைமுகங்கள் அமையப் பெற்றுள்ளன. ஆசிய வலயத்தில் மிக முக்கியமான இயற்கைத்துறைமுகம் அமையப் பெற்றிருப்பது இப்பிரதேசத்தினுள் உள்ள திருகோணமலையிலாகும். மேலும் இப்பிரதேசத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் அமைந்துள்ளன. இவை தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

- இலங்கையின் மொத்தக் கடற்கரைப்பகுதியில் ¼ பகுதி இப்பிரதேசத்திற்குச் சொந்தமானது. மிக நீண்டதும் அழகானதுமான கடற்கரைப்பகுதியை இப்பிரதேசம் கொண்டிருப்பதனால் இங்கு வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் தமது ஜீவனோபாயத் தொழிலாக மீனவத் தொழிலை மேற்கொள்கின்றனர்.
- சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களும் ஒன்றாக வாழும் பிரதேசம்.
- இலங்கையின் கூடுதலான நெல் வேளாண்மை நிலப்பரப்பு இப்பிரதேசத்தினுள் அடங்குகின்றது. இலங்கையில் கல்லோயாத்திட்டத்தின் மூலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பயிர் நிலங்களில் அதிகமானவை உள்ளடங்கப் பெறுவது இப்பிரதேசத்திலேயாகும். கல்லோயாத்திட்டமே இலங்கையின் முதல் பலநோக்கு அபிவிருத்தித் திட்டமாகும்.
- வடக்குப் பிரதேசத்தைப் போன்றே இப்பிரதேசத்திலும் கடந்த இரு தசாப்த காலமாக நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அபிவிருத்திப் பணிகள் சீர்குலைந்துள்ளன.

**கிழக்குப் பிரதேசம்**




தேசப்படம் 3.8

## கிழக்குப் பிரதேசத்தின் பௌதிக வளங்களை அறிந்து கொள்வோம்.

- கரையோரச் சமவெளி 0 – 30 மீற்றருக்கு இடைப்பட்ட உயரத்தினைக் கொண்ட பிரதேசமாகும்.
- வருட மழைவீழ்ச்சி 1,500 மி.மீ. – 2,000 மி.மீ. க்கு இடைப்பட்டதாகும்.
- வருடந்தோறும் 2 – 5 மாத காலம் வரை வரட்சிக்குள்ளாகிறது.
- உலர் வலய பருவக்காற்றுக்காடுகளும், களப்புக்களை அண்டி "கண்டல்" தாவரங்களும் காணப்படுகின்றன.
- அம்பாறைப்பகுதியில் செங்கல் ஓட்டுக்களியும், மைக்காபடிவமும், கல்குடா பிரதேசத்தில் உயிர்ப்பான பவளப்பாறைகளும் மற்றும் இறந்த பவளப்பா-றைகளும் பரந்து காணப்படுகின்றன.

- இயற்கைக் காடுகளை அண்டி வனவிலங்கு சரணாலயங்களும், பறவைகள் சரணாலயங்களும் காணப்படுவது இப்பிரதேசத்தின் வன வளங்களைக் குறித்து நிற்கிறது.

## பௌதிக சூழலுடன் தொடர்பான மானிடச் செயற்பாடு

- அம்பாறைப் பிரதேசத்தில் சேனநாயக்கசமுத்திரத்தின் மூலமும் திருகோணமலையில் மகாவலி அபிவிருத்தி வலயத்திலிருந்தும் ஏனைய பிரதேசங்கள் சிறிய பெரிய குளங்கள் வாயிலாகவும் மற்றும் மழை நீரைக் கொண்டும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- நீர்ப்பாசன வசதி கிடைக்கப்பெறாத உயர் நிலப்பிரதேசத்தில் கரும்பு, மரமுந்திரிகை, உலர் தானிய வகைகள் பயிர்செய்யப்படுகின்றன.
- மரத்தளபாடக்கைத்தொழில், கடதாசிஆலை, மீன்பிடியும் மீன்பிடி தொடர்பான கைத்தொழில்களும் இங்கு தாபிக்கப்பட்டுள்ளன.

கடந்த இருபது வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வடக்கிலும் கிழக்கிலும் நிலவுகின்ற உறுதியற்ற அரசியல் நிலைமைகளால் எவ்வித கைத்தொழில் உற்பத்தியும் நிகழாத அதே வேளை பாரிய வயல் வெளிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற நெல் உற்பத்தியானது தேசிய நெல் உற்பத்திக்குச் சேர்க்கப்படவுமில்லை. இரு தசாப்த காலமாக நடைபெற்று வரும் யுத்த நிலைமைகளும் எதிர்பாராத விதமாக முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட சுனாமி அனர்த்தமும் இப்பிரதேச மக்கள் எதிர் கொண்ட பாரிய தாக்கங்களாகும். இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கு இணையாக இப்பிரதேசத்தையும் கட்டியெழுப்பி அபிவிருத்தியை அடைவதற்கு அரசு பல்வேறு முடிவுகளை எடுத்துள்ளது.

*நெற்பயிர்செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலம் 1,750,000 ஹெக்டேயர்களும் மேட்டுநிலப்பயிர்செய்கை மேற்கொள்ளக்கூடியநிலம் 281 600 ஹெக்டேயர்களும் கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது. தேசியத்தேவையில் 25% நெல் உற்பத்தியை நிறைவு செய்ததும் கிழக்கு மாகாணமே. ஆயினும் மேற்கூறப்பட்ட நிலப்பரப்பில் பயிர் செய்யப்படும் நிலமாக விளங்குவது 50% - 60% இடைப்பட்ட பகுதியாகும். 2008 – 2009 வருடங்களில் பெரும் போகப் பயிர்ச்செய்கையின் போது கைவிடப்பட்ட வயல் நிலங்களில் சுமார் 17,335 ஹெக்டயர் (42,886 ஏக்கர்) நிலத்தை பயிர்ச் செய்கைக்குட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.*

*(தேசத்தைக்கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு – 2008)*

## கிழக்கின் உதயம்


இப்பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் "கிழக்கின் உதயம்" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இம்முன்னேற்றம் பல்வேறு விடயங்களின் கீழ் தலைப்பிடப்பட்டுள்ளன.

**உட்கட்டமைப்பு வசதிகளின்கீழ் வீதித் தொகுதிகளைப் புனர்நிர்மாணம் செய்தல்.**

- ஹபரணை - கந்தளாய்வீதி 44 கி.மீ.
- அல்லை - கந்தாளாய்வீதி 42 கி.மீ.
- திருக்கண்டி மடு - திருகோணமலை வீதி 99 கி.மீ.
- மாவடிச்சேனை - கணேசன்புரம் வீதி 33 கி.மீ.

மற்றும் கிண்ணியா, ஓட்டமாவடி, அறுகம் குடாவில், புதிய பாலம் நிர்மாணித்தல்.

**கிழக்குப் பிரதேசத்தின் வீதி அபிவிருத்தி**




தேசப்படம் 3.9

*மூலம்: பெருந்தெருக்கள், வீதி அபிவிருத்தி அமைச்சு*

## விவசாய நில அபிவிருத்தி

**நெல் அறுவடையின் போது**



உரு 3.25

கிழக்கில் மீண்டும் ஜனநாயக பரிபாலன முறைமை ஒன்றைத் தாபித்ததன் பின்பு முழு கிழக்குப் பிரதேசத்திலும் நெல் வேளாண்மையை விரிவாக்குவதற்கு பசளை மற்றும் விதை நெல் பகிர்ந்தளிப்பு நிகழ்வுடன் அனேக நிவாரணப் பணிகள் இடம் பெற்றன. அதன் பிரதி பலனாக 2007 – 2008 பெரும்போக அறுவடை விழாக்கோலம் பூண்டது. இவ்வுற்பத்தி தேசிய உற்பத்திக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மேலும் தேசிய சோளச் செய்கை உற்பத்தியில் ¼ பகுதியை கிழக்கிலிருந்து பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மரமுந்திரிகை மற்றும் பனை நடுகைத் திட்டம்

**மரமுந்திரிகை நாற்று மேடை**



உரு 3.26

- 2007ஆம் வருடம் ஆரம்பமான சமூக அமைப்புக்களின் பங்கேற்புடன் அம்பாறை மாவட்டத்தில் 25000 மரமுந்திரிகை கன்றுகளும் கஜுவத்த இராணுவ முகாமில் 12000 கன்றுகளையும் நடுதல்.
- கடற்கரையோரப் பாதுகாப்பிற்காக பனையையும், மரமுந்திரிகையையும் நடுகை செய்தல்.

*(மூலம் : இடைப்பெருந்தோட்டப்பயிர் அபிவிருத்தி அமைச்சு)*

## கரும்புச் செய்கை

- ஹிங்குரான சீனித் தொழிற்சாலையை மீண்டும் தனியார் துறையுடன் இணைந்து ஆரம்பித்தல்.
- கரும்புப் பயிர்ச் செய்கையாளருக்கு உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்

கொடுப்பதனூடாக கரும்புச் செய்கையை விரிவாக்கம் செய்தல். சீனியுடன் இடை உற்பத்திகளை மேற்கொள்ளல்.

- நெற்செய்கைக்கு நீர்ப்பாசன வசதியற்ற பகுதிகளில் கரும்புச் செய்கையை மேற்கொண்டு அது சார்ந்த (சீனி, பாணி, கருப்பட்டி) கைத்தொழில்களை நிறுவுதல்.

## மீன்பிடிக்கைத்தொழிலை மேலும் விருத்தி செய்தல்

**மீன் பிடித்துறை முகம்**



உரு. 3.27

- நவீன மீன்பிடித்துறைமுகங்கள் அமைத்தல்.
- பயன்பாட்டிலுள்ள துறைமுகங்களின் வசதிகளை மேம்படுத்தல்.
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) உதவியுடனும் அரச நிதி ஒதுக்கீட்டின் மூலமும் வாழைச்சேனை மீன் பிடித் துறைமுகம் புதுப்பிக்கப்படுகின்றமை.
- மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் பெறுவதற்கு வசதிகள் வழங்குதல்.
- “ஓடத்துறை விடியல்” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கரையோர மீன் பிடித்துறை முகங்களை அபிவிருத்தி செய்தல்.

## சுற்றுலாத்துறையை விருத்தி செய்தல்

- சோமாவதி வன விலங்குகள் சரணாலயம்
- குமண பறவைகள் பூங்கா
- பாசிக்குடா, கல்குடா, நிலாவெளி, மட்டக்களப்பு ஆகிய அழகிய கடற்கரை யோரங்கள் திருகோணமலை, கல்குடா, பாசிக்குடா மட்டக்களப்பு போன்ற சுழியோடும் இடங்கள் வாகரைக் கடற்கரையோர உல்லாச விடுதிகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சேருவில டச்சுக்கோட்டை, கிண்ணியா வெந்நீர் ஊற்று என்பன உல்லாசப் பயணிகளைக் கவருவதற்கு வாய்ப்பாக உள்ளன.

சேருவில, தீகவாபி ஆகிய வரலாற்று சிறப்புமிக்க பௌத்த தலங்களும் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயமும் அம்பாறை உகந்தை முருகன் ஆலயமும் இப்பிரதேசத்தில் அமையப்பெற்றிருப்பது சிறப்பம்சங்களாகும்.

**கிழக்கு கடற்பகுதியில் சுழியோடல்**



உரு 3.28

இவற்றின் மூலம் பிரதேசத்திற்கும், நாட்டிற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எதிர்கால நோக்காகும்.

அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு முதலில் கிழக்கு பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது மிக அவசியமாகும். எதிர்காலத்தில் நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் வசதிகளைப் பெறும்விதத்தில் அனைத்துத்துறையிலும் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கும் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தி வருமானம் பெறுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

## மீள்குடியமர்த்தும் வேலைத்திட்டம்

வடக்குக் கிழக்கு மீள் வீடமைப்புத் திட்டம் (NEHRP) வாயிலாக இப்பிரதேசத்தில் 2004 – 2009 கால இடைவெளியினுள் நிர்மாணிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட அளவில் 41.30 வீதமே 2007 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

*மூலம் : தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு - 2008*

**செயற்பாடு**

1 “கிழக்கின் உதயம்” அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் விபரங்களடங்கிய வெளிக்களப் புத்தகம் ஒன்றை அமைக்க.

2 கிழக்குப் பிரதேசத்திலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்படும் உற்பத்திப் பொருட்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.

3 அபிவிருத்தியில் மக்களுக்கிடையிலான ஒற்றுமை எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பது பற்றி சுருக்கமாக விளக்குக.


4 கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்தியில் பிரதேச வேறுபாடுகள் சிலவற்றை ஆசிரியருடன் கலந்துரையாடி எழுதுக.

5 கிழக்குப் பிரதேசத்தில் சுனாமிப் பேரலையால் ஏற்பட்ட தாக்கங்கள் ஐந்தினை எழுதுக.

6. i. தேசப்படம் 3.1 இல் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் ஒன்றினையோ பலவற்றையோ பார்வையிடுவதற்குக் களச் சுற்றுலா ஒன்றை ஒழுங்குபடுத்துக.

ii. அச் சுற்றுலாவில் நீங்கள் திரட்டிய தகவல்கள் ஊடகங்களினூடாகச் சேகரித்த தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கி அப் பிரதேசங்களின் அபிவிருத்தி பற்றிக் கோவைப்படுத்துக.

1. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிர் மாதிரியை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து பூரணப்படுத்துக.
2. உங்கள் விடைகளை ஆசிரியரின் உதவியுடன் செவ்வை பார்க்குக.



**இடமிருந்து வலம்**

1. இதுவே இலங்கையின் இரண்டாவது நீளமான ஆறாகும். வட பகுதிக் கடலில் சங்கமமாகிறது.
2. இதுவே இலங்கையின் முதல் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாகும்.
3. தென் கரையோரப்பகுதியில் அதிகமாகக் காணப்படும் பாறையாகும்.
4. அபிவிருத்தி ஏற்பட நாட்டில் முதலில் இந்நிலை காணப்பட வேண்டும்.
5. இல்மனைற்று எனும் கனிய வளம் இக்கடற்கரையோரத்தில் அதிகம் காணப்படுகிறது.
6. ஒரு இலட்சம் வயல் நிலங்கள் இங்கு காணப்பட்டமையால் ஊவாப் பிரதேசம் இவ்வாறு அழைக்கப்பட்டது.
7. விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள பிரதான இடம்.
8. பிபிலைப் பகுதி இப்பழச்செய்கைக்கு பிரசித்தமானது.
9. வீதி நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக மக்கள் நடமாடுவதற்கு இவை அமைக்கப்பட்டுள்ளன. இங்கு இடம்மாறியுள்ளது.
10. இரத்தினபுரி, ஒக்கம்பிட்டி பிரதேசங்களில் விலையுயர்ந்த இவை அதிகமாகக் காணப்படுகின்றன.

**மேலிருந்து கீழ்**

1. மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டை இது குறிக்கும்.

4. கொழும்பு பெருநகரில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இதுதான்.

7. வடக்கில் இந்த மாவட்டத்தில்தான் திராட்சைப் பழம் அதிகம் விளைகிறது.

9. நினைத்தாலே நிலைகுலையச் செய்யும் பயங்கர அனர்த்தம்.

10. இலங்கையின் பெரிய தீவு இதுதான். வரலாற்றுக் கால வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கிய துறைமுகங்களில் ஒன்று. இங்கு வரலாற்றுப் பெயர் தலைகீழாக உள்ளது.

12. பின்னவலையில் இதன் அனாதைகள் இல்லம் அமைந்துள்ளது.

13. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டப்பணிகள் இங்கு தான் ஆரம்பிக்கப்பட்டன.

14. பாரிய நீர்மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கம் இதுதான். இங்கு தலைகீழாக அமைந்துள்ளது.

15. வவுனியா, திருகோணமலை செல்லும் புகையிரதங்கள் இச்சந்தியில் வைத்து பிரிகின்றன. இங்கு தலைகீழாக உள்ளது.

16. ரன்ன, மித்தெனிய பிரதேசங்களுடன் இதனையும் இணைத்து மற்றொரு தென்னை முக்கோணப் பிரதேசம் உருவாகவுள்ளது.

17. திருகோணமலையை அண்மித்துள்ள உல்லாசப்பயணிகளை ஈர்க்கும் கடற்கரை.

18. மகாவலி கங்கை இச்சமவெளியில் தான் ஆரம்பிக்கிறது.

19. வங்காள தேசத்தின் பிரதான ஏற்றுமதிப் பயிர். பொதி செய்வதற்கு பயன்படும் இப்பயிர் இவ்வாறு சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

**மூலங்கள்**


- இலங்கை மத்திய வங்கியின் 2007 ஆம் ஆண்டு சமூக பொருளாதாரத் தரவு.
- மானிடப் புவியியல் க.பொ.த. (உ.த) கல்வி வெளியீட்டுத்திணைக்களம் 1998.
- இலங்கை மகாவலி அதிகார சபையின் முன்னேற்றப் பரிபாலன பிரிவு 2005 ஆம் வருடப் புள்ளிவிபரம்.
- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் "மழைநீர் சேகரிக்கும் தொழில்நுட்பமும், மழைநீர் தாங்கிப் பாவனை முறையும்" என்ற கையேடு (வருடம் குறிப்பிடப்படவில்லை).
- மேலதிகப் பெருந்தோட்டப் பயிர் அபிவிருத்தி அமைச்சு ("கரும்பு, பனை, மரமுந்திரிகை மூன்றும் தேசிய மட்டத்தில்" என்ற கையேடு).
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2009 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி பிரஜாபூமி அபிவிருத்தி அமைச்சு கையேடு
- பெருந்தெரு வீதி அபிவிருத்தி அமைச்சு. 2009 பெப்ரவரி 17 ஆம் திகதி தினமின பத்திரிகையின் நூற்றாண்டு விழாவின் "தேசத்திற்கான அர்ப்பணம்"சிறப்பிதழ் பிரசுரம்.
- Abhayarathne M.D.C., 2005 Regional Development Implications of The Accelerated Mahaweli Development Project, M.M Karunanayake, Andres Narman (Eds), Regional Development in Sri Lanka, Resetting the Agenda, University of Sri Jayewardenapura - Sri Lanka.